செய்தி வெளியீடு எண் :46 நாள் :25.06.2020

**தேனி மாவட்டம்**
**தனியார்துறை சார்ந்த அனைத்து சிறு குறு நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்கள் மற்றும் வேலைநாடுநர்கள் பயன்பெறுவதற்கு ஏதுவாக**
**தமிழக அரசால் "தமழ்நாடு தனியார்துறை வேலை இணையம் " 'Tamil Nadu Private Job portal' (www.tnprivatejobs.tn.gov.in) ஏற்படுத்தப்பட்டுள்ளது -**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:**
**********

தமிழ்நாட்டில் வேலைநாடும் இளைஞர்களையும், வேலை அளிக்கும் தனியார்துறை நிறுவனங்களையும், இணையதள வழியாக இணைத்து வேலைவாய்ப்புகளை பெற்றுத்தரும் நோக்கத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின், வேலைவாய்ப்பு பிரிவால் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட "தமழ்நாடு தனியார்துறை வேலை இணையம் " 'Tamil Nadu Private Job portal' (www.tnprivatejobs.tn.gov.in) என்ற இணையதளம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.06.2020 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தனியார் துறையில் பணியாற்ற விரும்பும் இளைஞர்கள் இவ்விணையதளத்தில் நேரடியாக பதிவு செய்து தங்கள் கல்வி தகுதி, முன்அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்ற பணிவாய்ப்புகளை பெறுவதற்கும், தனியார் துறை சார்ந்த அனைத்து சிறு, குறு, நடுத்தர மற்றும் பெரு நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் காலிப்பணியிடங்களை இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்து அப்பணிகாலியிடங்களுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்து பணி நியமனம் வழங்குவதற்கும் இவ்விணையதளம் வழிவகை செய்கிறது. வேலை அளிப்போர் மற்றும் வேலை நாடுநர்களுக்கு இச்சேவை, கட்டணம் ஏதுமின்றி முற்றிலும் இலவசமாக தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

ஏற்கனவே தேனி உட்பட அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் சிறிய மற்றும் பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வந்தது. தற்போதைய சூழ்நிலையில், இதற்கு மாற்றாக தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையதளம் மூலம் இணையவழி நேர்காணல் மற்றும் இணையவழி பணிநியமனம் ஆகிய வசதிகளைப் பயன்படுத்தி, அதிக எண்ணிக்கையில் தேனி மாவட்ட வேலைநாடும் இளைஞர்களை, இணைய வழியாக தொடர்பு கொண்டு தனியார்துறை வேலையளிப்போர்கள் பணி வாய்ப்புகளை அளிப்பதற்கான அரிய சேவை உருவாக்கி தரப்பட்டுள்ளது.

மேலும் இவ்விணையதளத்தைப் பயன்படுத்துவது தொடர்பான விவரங்களுக்கு தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தொலைபேசி-04546-254510 வாயிலாகவும் deotheni@gmail.com மின்னஞ்சல் வாயிலாகவும் தொடர்புகொண்டு விவரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, தேனி மாவட்டத்தில் உள்ள தனியார்துறை சார்ந்த அனைத்து சிறு குறு நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்கள் மற்றும் வேலைநாடுநர்கள் இவ்விணைய தளத்தில் நேரடியாகப் பதிவு செய்து பயன்பெறுமாறு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**